



முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் – விபத்தில் சிக்கி உயிரிழந்த இராமநாதபுரம் மாவட்டம் க.முத்தமிழ்ச்செல்வன் அவர்களின் குடும்ப நிவாரண நிதியாக, பத்து இலட்சத்திற்கான காசோலையினை, முத்தமிழ்ச்செல்வன் அவர்களின் துணைவியார் திருமதி மு.சந்தனவள்ளியிடம் வழங்கினார். உடன் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர் எ.வ.வேலு, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம், எம்.எல்.ஏ., அமைச்சர் ராஜகண்ணப்பன், முதுகுளத்தூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் சண்முகம் ஆகியோர் உடனிருந்தனர்.




முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் – விபத்தில் சிக்கி உயிரிழந்த ஈரோடு மத்திய மாவட்டம் வே.சரவணன் அவர்களின் குடும்ப நிவாரண நிதியாக, பத்து இலட்சத்திற்கான காசோலையினை, வே.சரவணன் அவர்களின் துணைவியார் திருமதி கு.ஆனந்தியிடம் வழங்கினார். உடன் கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி., அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர் எ.வ.வேலு, செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், ஈரோடு மத்திய மாவட்டக் கழகப் பொறுப்பாளரும் முன்னாள் அமைச்சருமான தோப்பு வெங்கடாசலம் மற்றும் காஞ்சிகோவில் பேரூர்ச் செயலாளர் செந்தில்முருகன் ஆகியோர் உடனிருந்தனர்.

### மதுரையில் நடைபெற்ற கழகப் பொதுக்குழுவில் அறிவித்தபடி,

# சாலை விபத்தில் இறந்தவர்களுக்கு கழக குடும்ப நிதி!

## தி.மு.க. சார்பில் இருவருக்கு தலா ரூ.10 லட்சம்! முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, ஆக. 25 -**

**மதுரையில் நடைபெற்ற கழகப் பொதுக்குழுவில் அறிவித்தபடி, முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சாலை விபத்தில் மறைவெய்திய இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த க.முத்தமிழ்ச் செல்வன் மற்றும் ஈரோடு மத்திய மாவட்டத்தைச் சேர்ந்த வே.சரவணன் ஆகிய இருவரின் குடும்பத்திற்கும் தி.மு.க. சார்பில் தலா ரூ.10 இலட்சம் வீதம் ஆக, மொத்தம் 20 இலட்சம் ரூபாயினை குடும்ப நிவாரண நிதியாக வழங்கினார்.**

மதுரையில் 1.6.2025 அன்று நடைபெற்ற தி.மு.க. பொதுக்குழுக் கூட்டத்தில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “கழக உறுப்பினர்கள் யாராவது எதிர்பாராத விதமாக சாலை விபத்தில் இறந்து போகும் சூழல் ஏற்பட்டால், இறந்த உறுப்பினரின் குடும்ப வாரிசுகள் 21 வயதுக்கு குறைவாக இருந்தால் அந்தக் குடும்பத்துக்கு தலைமைக் கழகத்தின் சார்பில் பத்து இலட்ச ரூபாய் நிவாரண நிதியாக வழங்கப்படும். அந்தப் பிள்ளைகளின் படிப்பு, குடும்பச் சூழலுக்கு இந்த நிதி உதவும்.” என்று அறிவித்திருந்தார்.

அந்த வகையில், கடந்த 2.8.2025 அன்று விபத்தில் மரணமடைந்த திண்டிவனம், இறையனூரைச் சேர்ந்த திருமதி சரிதா குடும்பத்திற்கு நிதியுதவி வழங்கியதைத் தொடர்ந்து, 12.6.2025 அன்று இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த கழக உறுப்பினரான க.முத்தமிழ்ச் செல்வன் அவர்கள், பார்த்திபனூர் கமுதி செல்லும் வழியில், நத்தம் அருகில், வாகன விபத்தில் சிக்கி, சம்பவ இடத்திலேயே உயிரிழந்துவிட்டார்.

மேலும் 23.7.2025 அன்று ஈரோடு மத்திய மாவட்டத்தைச் சேர்ந்த கழக உறுப்பினரான வே.சரவணன் அவர்கள், அம்மாபேட்டையிலிருந்து குருவரெட்டியூர் செல்லும் சாலையில் வாகன விபத்தில் சிக்கி, சம்பவ இடத்திலேயே உயிரிழந்துவிட்டார்.

விபத்தில் சிக்கி உயிரிழந்த மேற்சொன்ன இருவரின் குடும்பத்திற்கும் நிவாரண நிதியாக, தலா ரூபாய் பத்து இலட்சம் வீதம் ஆக மொத்தம் ரூபாய் 20 இலட்சத்திற்கான காசோலையினை, முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்கள், இராமநாதபுரம் மாவட்டம் க.முத்தமிழ்ச்செல்வன் அவர்களின் மனைவி திருமதி மு.சந்தனவள்ளி அவர்களிடமும் - ஈரோடு மத்திய மாவட்டம் வே.சரவணன் அவர்களின் மனைவி திருமதி கு.ஆனந்தி அவர்களிடமும் நேற்று முன்தினம் (23.08.2025) காலை, சென்னை - அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் வழங்கினார்.

---

### கல்வியிலும் உயரும் திராவிட மாடல் அரசு!

# திருவாரூர் - குடவாசலில் புதிய கல்லூரிக் கட்டிடம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று காணொளி வாயிலாக திறந்து வைக்கிறார்!

**திருவாரூர், ஆக. 26 -**

**திருவாரூர் - குடவாசலில் அமைந்துள்ள அரசுக்கல்லூரிக்கு, தமிழ்நாட்டின் முதல்வர், திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி, ரூ.15 கோடி திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள புதிய கட்டிடத்தை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று காணொளி வாயிலாக திறந்து வைக்கிறார்.**



திருவாரூர் மாவட்டம் குடவாசலில் கடந்த 2017-ஆம் ஆண்டு அப்போதைய அ.தி.மு.க. ஆட்சியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்கப்பட்டது.

தொடர்ந்து எட்டு ஆண்டுகளாக இந்த கல்லூரி குடவாசல் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில்தான் கல்லூரி இயங்கி வந்தது.

எம்.ஜி.ஆர். பெயரில் கல்லூரியை தொடங்கிய அ.தி.மு.க. அரசு, கல்லூரிக்கு தேவையான கட்டிடங்களை கட்டுவதற்கு எந்தவித முனைப்பும் காட்டாமல் இருந்தது. இது குறித்து கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பலமுறை போராட்டம் நடத்தியும் அப்போதைய அ.தி.மு.க. அரசு கல்லூரி கட்டுவதற்கு எந்தவித முயற்சி எடுக்காமல் இருந்தது. இதனால் ஒரே இடத்தில் பள்ளி மாணவர்களும் கல்லூரி மாணவர்களும் பயிலக்கூடிய அவலம் நிகழ்ந்து இருந்தது.

இந்த நிலையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு தொடக்க .கல்வி உயர்கல்வி இவைகளில் இந்திய அளவில் தமிழ் நாட்டை முதலிடத்திற்கு கொண்டு செல்லும் திராவிட நாயகர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆட்சி மக்களின் பேராதரவோடு அமைந்தது.

திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கே.கலைவாணன் தொடர் முயற்சியால் தமிழ்நாடு முதல்வரின் வழிகாட்டுதல்களின்படி இக்கல்லூரிக்கு புதிதாக கட்டடம் கட்டப்பட்டுவருகிறது. புதிதாக கல்லூரி கட்டிடம் கட்டுவதற்காக தி.மு.க. மாவட்டச் செயலாளரும் திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கலைவாணன் ரூ.25 லட்சம் மதிப்பிலான தனக்கு சொந்தமான இடத்தை கல்லூரி கட்டிடம் கட்டுவதற்கு அரசுக்கு தானமாக பத்திரப் பதிவு செய்து கொடுத்திருந்தார்.

இதையடுத்து அந்த இடத்தில் ரூ.15 கோடி மதிப்பீட்டில் கடந்த ஆண்டு கட்டிடம் கட்டும் பணி தொடங்கியது. இந்த கட்டிடத்தில் 14 வகுப்பறைகளும், 3 ஆய்வகமும், ஒரு நூலகம், 6 இதர அறைகளும், கருத்தரங்க அறை ஒன்று ஆகியவைகளுடன் 43,324 சதுர அடி பரப்பளவில் இரண்டு தளத்துடன் கூடிய கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. மேலும் விளையாட்டு மைதானம் உள்ளிட்ட கல்லூரிக்கு தேவையான அனைத்து கட்டமைப்பு வசதிகளும் இந்த கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ளது.

இன்று 25.08.2025. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொளி வாயிலாக இந்த கல்லூரி கட்டிடத்தினை திறந்து வைக்கிறார்.

நிகழ்வில் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களும், சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கே.கலைவாணன் உள்ளிட்ட சட்டமன்ற உறுப்பினர்களும், கல்வியாளர்களும், பொதுமக்கள் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.



முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, சென்னையில் நாளை (26.08.2025) நடைபெறவுள்ள தமிழ்நாடு முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தினை நகர்ப்புறங்களில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும் விரிவாக்கம் செய்யும் தொடக்க விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்வதற்கான விழா அழைப்பிதழை 23.08.2025 அன்று சண்டிகரில் பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் மான் அவர்களிடம் நாடாளுமன்ற உறுப்பினர் பி.வில்சன் நேரில் சந்தித்து வழங்கினார்.



தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம். பிள்ளையார்நத்தம் ஊராட்சியில் நேற்று முன்தினம் (23.08.2025), மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து தனியார் பங்களிப்புடன் 1000 பண்ணைக் குட்டைகள் அமைப்பதற்கான பணியினை தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன் முன்னிலையில் துவக்கி வைத்து, பண்ணை குட்டை அமைப்பதற்கான ஆணைகளை விவசாயிகளுக்கு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத், விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்க்கண்டேயன், மேயர் பெ.ஜெகன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



கழகப் பொருளாளரும், முன்னாள் ஒன்றிய அமைச்சருமான டி.ஆர்.பாலு எம்.பி. அவர்களின் துணைவியாரும் தொழில்நுட்ப அணி செயலாளரும், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சருமான டி.ஆர்.பி.ராஜா அவர்களின் தாயாருமான திருமதி ரேணுகா தேவி அவர்கள் மறைவையொட்டி சென்னை தியாகராயர் நகரில் உள்ள இல்லத்தில் முரசொலி மாறன் அவர்களின் துணைவியார் திருமதி மல்லிகா மாறன் மற்றும் திருமதி காவேரி கலாநிதி மாறன் மற்றும் திருமதி செல்வி செல்வம் ஆகியோர் நேரில் சென்று அம்மையாரின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து ஆறுதல் கூறினர்.